Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

நகையா 22 கரட்டில் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்
A.K.S ஜீவலர்ஸ்
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி

ஒளி - 02 - கதிர் - 48 06.06.2001 புதன்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

# காவத்த முனையில் மோதல்

# 6 படையினர், ஒரு பொதுமகன் பலி!

## 10படையினர், 15பொது மக்கள் காயம்

(ஏறாவூர், வாழைச்சேனை நிருபர்கள்)

**மட்டக்களப்பு காவத்தமுனைப் பகுதியில் காவற்கடமைக்குச் சென்ற படையினர் மீது நேற்றுக் காலை 8 மணியளவில் விடுதலைப்புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் 6 படையினர் பலியானதுடன் பத்துப் படையினர் காயமடைந்தனர். இதையடுத்து 23.2 பிரிகேட் அலுவலகத்திலிருந்து படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலுக்கு எம்.கே.சுபைர் (24 வயது) என்பவர் பலியானதுடன் 15 முஸ்லிம் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.**

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 32 கி.மீற்றரில் வாழைச்சேனை காகித ஆலைக்கு அருகாமையில் காவத்தமுனை முஸ்லிம் கிராமம் உள்ளது. இக்காகித ஆலை வளாகத்திலேயே வாழைச்சேனை பிரதேசத்திற்குப் பொறுப்பான 23-2 பிரிகேட் அலுவலகம் அமைந்துள்ளது.

திங்கள் இரவு இக்காவலரணை நோக்கி விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து நேற்று காலை காவல் கடமைக்குச் சென்ற படையினர் காவலரணிலிருந்து சிறிது தூரம் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அப்பகுதியில் மறைந்திருந்த விடுதலைப்புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை அடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தியதுடன் நாலாபுறமும் எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். சுமார் ஒரு மணிநேரமாக படையினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர் என உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றார்கள். இதேவேளை தாக்குதலுக்கு மேலதிக படையினர் வந்த போது புலிகள் தாக்கியதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## படையினரின் தேவைகள் நிறைவேற்றப்படும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படும் வரை முப்படைகளினதும், பொலீஸாரினதும் பயிற்சிகள் வலுப்படுத்தப்படும். அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசு வழங்கும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார். கண்டி பல்லேகலவில் படையினர் கிராமத்தில் நாட்டுக்காக உயிர்நீத்த படையினரின் குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் இளைஞர் மீது லண்டன் நீதிமன்றில் வழக்கு

(லண்டன்)

இலங்கைத் தமிழர் ஒருவரை கொலை செய்ததாகக் கூறப்படும் 19 வயதான இலங்கைத் தமிழ் இளைஞர் மீது, பிரிட்டிஷ்' நீதி மன்றத்தில் கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டதாக 'லண்டன்' பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மனோகுமார் குமார்(வயது31) என்பவரை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இறுதியில், அவரது வீட்டுக் குள் நுழைந்து கோடரியால் தாக்கிக் கொன்றதாக ரூபன் தனபாலசிங்கம் (வயது 19) என்பவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. 'கிரடிட் கார்ட்" மோசடியில் கிடைத்த லாபத்தை பங்கிடுவதில் எழுந்த தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் என்றும் -குமாரின் வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த ரூபன் குமாரைக் கோடரியால் தாக்கிக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றதாகவும் கொலைச் சம்பவத்தின் போது ரத்தத்தில் நனைந்த தனது ஆடைகளை சிலுவைசுக்ரி மனோ (வயது 27) என்பவரது வீட்டில் ரூபன் மறைத்து வைத்ததாகவும் - பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்று பாலகிட்ணரின் இறுதிக்கிரியை



(நமது நிருபர்)

காலம் சென்ற மேன்முறையீட்டு நிதிமன்றத்தின் முன்னாள் தலைமை

(8ம் பக்கம் பார்க்க)

## மணலாறில் புலி உறுப்பினர் மரணம்

(நமது நிருபர்)

மணலாறுப் பகுதியில் கடந்த மாதம் 28ஆம் திகதி இராணுவத்து டன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் கோபு(இராசையா ராஜ்குமார், அம்பாறை) என்பவர் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். இதேவேளை -முல்லைத்தீவு,

(8ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி காலிழப்பு!

(நமது நிருபர்)


சங்கத்தானைப் பகுதியில் நேற்றுக் காலை வீடு பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கித் தனது இடது காலை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சங்கத்தானையிலிருந்து இடம் பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த கந்தசாமி கருணாகரன் (வயது27) என்ற இளைஞரே இடது காலை இழந்தவராவார்.

## மன்னார் பாலியல் வல்லுறவு சந்தேக நபர்களை மன்றில் ஆஜர்படுத்த வேண்டாம் என நீதிபதி உத்தரவு

(மன்னார் நிருபர்)

மன்னாரில் இரு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது தொடர்பான சந்தேகநபர்களான படையினரை இன்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டாம் என மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.எச்.எம்.அஜ்மீர் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)




உடனடி வேலைவாய்ப்பு

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)

1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

உடனடிப் பயணம்

நியூபாஹிம் என்டர்ப்பிரைஸஸ்

LL No -736

283/1 பிரதான வீதி, கொழும்பு.

*விசாரணைகளுக்கு:*

இல:15/1, 15/2, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090

ADVT.


## மன்னர் கஜனேந்திராவின் விசாரணையில் நேபாள மக்களுக்கு நம்பிக்கையில்லை

### மக்கள் கிளர்ச்சியை துப்பாக்கி முனையில் நசுக்க தொடர்ந்து முயற்சி

(காத்மண்டு)

மன்னர் பிரேந்திரா, ராணி ஐஸ்வர்யா உள்ளிட்ட மன்னர் குடும்பத்தினரின் கொலையைத் தொடர்ந்து நேபாள தலைநகர் காத்மண்டுவில் தோன்றிய அமைதியீனம் தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் ஆயிரக்கணக்கில் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். இந்த



ஆர்ப்பாட்டங்கள், குழப்பங்களைத் தொடர்ந்து, காத்மண்டுவில் ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் நேற்று அங்கு ஓர் செயற்கையான அமைதி தோன்றியது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது

(8ம் பக்கம் பார்க்க)

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554

E-mail :- tkathir@snet.lk


## எப்போது விடியும்?

இலங்கையின் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி அமைப்புக் கோட்பாட்டின் கீழேயே தீர்வு காணப்படவேண்டுமென்பதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக இருக்கிறதென்று இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கா இந்தியப் பிரதமர் வாஜ பாயிடம் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் முன்னரும் இந்தியா வுக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவர்த்தை நடத் தியிருக்கிறார். இப்பொழுதும் இந்தியாவுக்குச் சென்றுள்ள எதிர்க்கட் சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க உள்நாட்டு அமைச்சர் அத்வானி, எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் அரசியல் தலைவர்க ளையும் சந்தித்து இலங்கை நிலமைகளை பற்றி எடுத்துக் கூறி னாராம்.

இப்படியே இலங்கைக்குத் திரும்பும் வழியில் தமிழ் நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள ஜெயலலிதாவையும் சந்தித்துப் பேசி யிருக்கிறார்.

ஜெயலலிதாவும் இலங்கையில் மக்கள் போரினால் உயி ரிழப்பது பற்றியும் கவலை தெரிவித்து இலங்கையின் ஒருமைப்பாடு ஐக்கியம் பற்றியும் எடுத்துக் கூறினாராம்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்குத் தடையாக இருக்கின்ற விடுத லைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தும் அதற்கு இலங்கை அரசு சம்மதிக்காமல் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை பற்றி இதுவரை எதர்க்கட்சித் தலைவர் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கும் தமிழ் மக்கள் அநாதைகளாகவும் அகதிகளாகவும் அல்லல் பட்டுத் திரிவதற்கு ஒரு முடிவு காண்பதற்கான யோசனை எதனையும். இதுவரை ஒரு வார்த்தை கூட சொல்வதற்கு முன் வரவில்லை.

ஆனால் இலங்கையின் ஒற்றையாட்சி முறையில் தாம் உறுதியாக இருப்பதாக இந்தியத் தலைவர்களுக்குத் தெரிவித்திருக்கி றார்.

கடந்த ௬0 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் இருந்து வரும் ஒற்றையாட்சி முறை தான் இன்றைய தொல்லைகளுக்கெல்லாம் காரணம் என்பதை ரணில் விக்கிரம சிங்கா உணரவில்லையா?

இந்த ஒற்றையாட்சி முறையின் கீழ் இலங்கையில் பெரும் பான்மை ஜனநாயகம் தான் இருக்கும். தமிழ் மக்கள் ஜனநாயக உரிமை களை அனுபவிக்க முடியாதென்பதை ரணில் இன்னும் அறிந்து கொள்ள வில்லையா?

இலங்கை பிளவு படாமல் இந்தியாவில் உள்ளது போலாவது சமஷ்டி அமைப்பைக கொண்டு வரலாமென்றாவது ரணில் விக்கிரம சிங் கா தெரிவித்திருந்தாரானால் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனபதில் அவருக்கு அக்கறையிருக்கின்றதென்றாவது நினைக்கலாம்.

இப்போது ரணில் விக்கிரமசிங்காவின் கவலை எல்லாம் தான் எப்படிக் ஆட்சிக்கு வருவது இலங்கையில் சந்திரிகா ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து எப்படி நிறைவேற்றுவது என்பதுதான்.

சிங்களப் பேரின வாதிகளின் ஆட்டத்துக்குத் தாளம் போடுவதில்தான் ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் எதிர்க்கட்சியிலுள்ள வர்களும் அக்கறை செலுத்து கிறார்கள்.

இந்த நாட்டில் தமிழ் மக்களும் உரிமையுடன் சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ வேண்டுமென்பதில் அவர்களுக்கு அக்கறை யில்லை.

இந்தியத் தலைவர்கள் தாங்கள் ஆட்சியை எப்படிக் காப் பாற்றிக் கொள்ளலாம் என்பதிலும் தங்கள் நாட்டு வர்த்தகத்திலும் தான் அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் எவரையும் இனியும் எதிர்பார்த்திருப்பதில் பயனில்லை. தமது பொருளாதாரத்தை எப்படி பாதுகாத்துக் கொள் ளலாம். மக்கள் தமது சொந்த நிலத்தில் சுதந்திரமாகவும் பாதுகாப் பாகவும் வாழ்வதற்கு என்ன வழியைப் பின்பற்ற வேண்டுமென்பதில் உறுதியான ஒரு வழியைத் தேடிக் கொள்ள வேண்டியது அவசியம்.

எதிர்க்கட்சித் தலைவருக்கோ ஆளும் கட்சியினருக்கோ தமிழ் மக்களின் நலனில் அக்கறையில்லை. நாட்டு நலனிலும் அக்கறையும் ஆர்வமும் இல்லையென்பது தெளிவாகிவிட்டது. சிங்கள மக்கள் இதை இன்னமும் உணரவில்லை.அவர்கள் உணர்ந்து கொள்ளும் போது தான் நாட்டிற்கு விடிவு ஏற்படும்.

# மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம் ''பவள விழா''

## இன்றும் நாளையும் சிறப்பு விழாக்கள்

மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லம் வேரூன்றி இன்று எழுபத்தி ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகி பவளவிழாக் காண கிறது.

கடந்த 1926ம் ஆண்டு யூன் மாதம் 6ம் திகதி யாழ்ப் பாணம் வண்ணார் பண்ணையில் வெள்ளிக்கிழமைமடம் எனும் பெயருடன் நான்கு மாணவர்க ளுடன் ஆரம்பிக்கப்பட்ட இல்லமா னது, கடந்த 14.11.1929 ஆம் திகதி மட்டக்களப்பு சிவானந்தா வித்தி யாலயத்தின் வளர்ச்சியைக் கருத் திக்கொண்டு கல்லடி உப்போடை க்கு மாற்றப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷன் நிறுவன ரீதியான பணிகள் கடந்த 1925ம் ஆண்டு ஆழமாக வேரூன்ற ஆரம் பித்தன. அனைத்துக்கும் கண்ணா யிருப்பது கல்வி என்ற உயர்ந்த சிந்தனைக்கிணங்க கிழக்கு மாகா ணத்திற்கு கல்வி எனும் ஒளியை முன் எடுத்துச்சென்றது. அறியா மை இருளை அகற்ற அயராது பாடுபட்டது. இப்பணியில் இராம கிருஷ்ண மிஷனின் கருவியாக சுவாமி விபுலானந்த அடிகளார் தியாக சிந்தையோடு செயல்பட் டார். இராமகிருஷ்ண மிஷன் ஆரம் பித்த இப்பணிக்கு மட்டக்களப்பு உப்போடை அடித்தளமாய் அமை ந்தது எனலாம்.

இராமகிருஷ்ண மிஷன் நிர்வகித்து வந்த அனைத்து பாடசாலைகளும் அரசாங்கத்தி னால் கடந்த 01.12.1960 பொறுப் பேற்கப்பட்ட வேளை இராம கிருஷ்ண மிஷன் தனது பணிகளை, மாணவர் இல்லங் களின் பணிகளை மேலும் விரிவுபடுத்தி சமய கலாசார பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டது.

உலகளாவிய இராமகி ருஷ்ண சங்கத்தின் 10வது தலை வர் ஸ்ரீமத் சுவாமி விரேஸ்வரா னந்த ஜீ மகராஜ் அவர்கள் 1968 மே 10ந் திகதி மட்டக்களப்பிற்கு வருகை தந்தபோது புதிய மாண வர் இல்லத்திற்கான கட்டிடத்திற்கு அடிக்கல் நட்டு ஆசிர்வதித்தார். இப்புதிய மாணவர் இல்லத்தின் திறப்பு விழா 1972ம் ஆண்டு மே 27ம் திகதி மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

அதே போன்று ராமகி ருஷ்ணபுரம் சாரதா மகளிர் இல் லத்துக்கான புதிய கட்டிடம் 1985 யூன் 3ம் திகதி அப்போதைய இலங்கை கிளைத்தலைவர் சுவாமி பிரேமானந்த ஜீ மகராஜ் அவர்களி னால் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவிலும் 1994 மே 27ம் திகதி உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் பொதுச் செயலாளர் சுவாமி ஆத் மஸ்த்தானந்த ஜீ மகராஜ் அவர்களினால் புதிய கட்டிடம் திறக் கப்பட்டது.

இவ்வாறு விரிவுபட்ட ஆன்மீக ரீதியிலும், கல்வி வளர்ச்சி யிலும், நல் ஒழுக்கத்திலும் மாண வர்களை அன்புடன் வழி நடாத்தி வரும் ராமகிருஷ்ண மிஷனின் புனிதப் பணி எழுபதைந்தாண்டில் காலடி எடுத்து நிற்பதை மட்டக்க ளப்பு தமிழ் சமூகம் பெருமையுடன் நினைவு கூறவேண்டும்.

இன்று எமது நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் இன ஒடுக்குமுறையின் திட்டமிட்ட போர் காரணமாக தாய் தந்தையர்களை இழந்து பரிதவித்துக்கொண்டிருக் கும் எமது உடன் பிறப்புக்களான அநாதைச் சிறார்களுக்கு ஒளி கொ டுக்கும் உன்னத பணியை இராம கிருஷ்ண மிஷன் இல்லம் செய்து கொண்டிருப்பது மிகவும் தூய்மை யான பணியாகும்.

பவள விழாவினை சிறப்புடன் முன்னெடுக்கும் இக்குழு வினர் வெறும் சமய நிகழ்வுக ளையும், மலர் வெளியீடுகளையும், கலை நிகழ்வுகளையும், பரிசளிப்பு

**பா.அரியநேததிரன்**

விழாக்களையும், பேரணிகளையும் மட்டும் நடாத்தவில்லை.

நொந்துபோன உள்ளங் களுக்குத் துயர் துடைக்கும் பணி களிலும் இலங்கை அரசாங்கத் தால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப் பட்டுள்ள வாகரை, கொக்கட்டிச் சோலை, வவுணதீவு, மண்டூர் பகுதிகளில் மிகவும் பின்தங்கி நோய்வாய்ப்பட்டு. வைத்தியர் இன் றியும், வைத்திய சேவைகள் இன் றியும் அல்லல்பட்டு தத்தளித்த தமிழ் சமூகத்திற்காக நடமாடும் இலவச வைத்திய முகாம்களை நடாத்தியுள்ளார்கள்.

இவ் வைத்திய முகாம்க ளுக்கு இன் முகத்துடன் முகம் கோணாமல் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற நோக்கில் மட்டுநகர் போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர்களும், தாதிமார்களும், பவள விழாக்குழு வினர்களும், தமது சொந்த வேலைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு பல இலட்சம் பெறு மதியான மருந்துப் பொருட்களுடன் சென்று வைத்திய சேவை புரிந்துள் ளமையை எமது மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

இவ் வைத்திய முகாம் இடம்பெற்றமையினால் ஏறாத்தாழ எட்டாயிரம் பொதுமக்கள் நன்மை யடைந்திருக்கின்றனர்.

இதைவிட இரத்த தானம், சிரமதானம், மரம் நடும் இயக்கம் போன்ற பல பணிகளை இவ்விழாக் குழுவினர் செய்திருக்கிறார்கள். இப்பணிகளைத் தொடர்ந்து இன்று ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்த ஸ்ரீ மகராஜ் கல்கத்தா ஸ்ரீ ராமகி ருஷ்ண மிஷனின் உதவிப் பொதுச் செயலாளர் அவர்கள் பிரதம விருந்தினராகவும், ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத் மகனானந்த ஜீ மகராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கும் விழாவில் எமது கல்லடி உப்போடை இராம கிருஷ்ணமிஷன் மாணவரில்ல பவள விழாக்குழு தவிசாளர் சுவாமி ஜீவானந்த மகராஜ், ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்த ஜீ மகராஜ் உட்பட பௌத்த, கிறிஸ் தவ, இஸ்லாமிய பெரியார்களும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

சமய நிகழ்வுகள், அலங் கார ஊர்பேரணி, மலர் வெளியீடு, சிறப்புரைகள், பரிசளிப்பு கலை நிகழ்வுகள் என இரண்டு தினங்களாக (06.06.2001-07.06.2001) இடம்பெறும். மாணவரில்லப் பவள விழா சிறப்புற்று மென்மேலும் பல நூற்றாண்டு காலம் மட்டக்களப்பு தமிழகத்தில் மணம் பரப்ப வேண் டும் என பிரார்த்திப்போம்.

-சுபமங்களம்-

## கிரான் குளத்தில் வெள்ளரிச் செய்கை பன்றிகளாலும் பாதிப்பு

(அரியம்)

மட்டக்களப்பு கிரான் குளத்தில் பன்றிகள் தொல்லை யினால் வெள்ளரிச்செய்கை பாதிக் கப்பட்டுள்ளது. வருடா வருடம் கிரான்குளத்தில் சுமார் 60 ஏக்கரில் வெள்ளரிக் கொடிகள் செய்கை பண்ணப்படுவது வழமை. ஆனால் கடந்த பெருவெள்ளம் காரணமாக பள்ள நிலங்களில் செய்கைபண்ண முடியவில்லை. சுமார் 25 ஏக்கர் மேட்டு நிலத்தில் மட்டுமே இவ் வருடம் வெள்ளரிச் செய்கை மேற் கொள்ளப்பட்டது.

இச் செய்கையில் ஈடு பட்டுள்ள விவசாயிகளுக்கு தற் போது காட்டுப்பன்றியின் தொல்லை யினால் வெள்ளரிக் கொடியில் உள்ள பிஞ்சுக்காய்களையும், முதிர்ந்த காய்களையும் பன்றிகள் சேதப்படுத்தியுள்ளன.

வருடா வருடம் கிரான் குளத்தில் செய்கை பண்ணப்படும் வெள்ளரிப் பழம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமன்றி பிற மாவட்டங்களுக்கும் விற்பனை செய்யப்படுவது வழக்கமாகும்.

ஆனால், இந்த வருடம் கடந்த காலங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினாலும், பன்றியின் தொல்லைகளினாலும், குறிப்பிட்ட தொகையில் மட்டுமே வெள்ளரிச் செய்கையால் பயன்பெற முடிந்த தென்றும், இதனால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நட்டஈடு வழங்கவேண் டும் எனவும் கிரான்குள விவசா யிகள் தெரிவிக்கின்றனர்.

## அம்பிளாந்துறையில் பாடசாலை விழா

(அரியம்)

அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத் தின் 117வது ஆண்டு நிறைவை யொட்டி எழுச்சி விழாவொன்றினை நடாத்தவுள்ளதாக கலைமகள் மகா வித்தியாலயத்தின் அதிபர் பி.சந்திரபோஸ் தெரிவித்தார்.

இதனையொட்டி பல்வேறு நிகழ்வுகளுடன் அம்பிளாந்துறை கலை மகள் மகா வித்தியாலயத் தினால் "கலைமகள்" எனும் மலர் வெளியீடு ஒன்றினையும் செய்யவுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

எழுச்சி விழா தொடர்பாக இப்பாடசாலை மாணவர்கள், ஆசி யர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலம் விரும்பிகள் என பலதரப்பட்டவர்கள் இணைந்து இவ்விழாவில் விளையாட்டு கலை நிகழ்ச்சி, பேச்சுப்போட்டி என்ப வைகளை நடாத்தவுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

அம்பிளாந்துறை கலை மகள் மகா வித்தியாலயம் படு வான்கரைப்பகுதியில் பழமை வாய் ந்த பாடசாலை என்பது குறிப்பிடத் தக்கது.

# காவத்தைமுனை இராணுவத் தாக்குதலில்
## வீடுகள் சேதம், மக்கள் காயம், எம்.பி கண்டனம்

(ஏறாவூர் நிருபர்)

வாழைச்சேனை காவத்தை முனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற செல் தாக்குதலில் பொது மக்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மட்டக் களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அலிஷாஹிர் மௌலானா வாழைச்சேனை இராணுவ கட்டளையதிகாரி கேர்ணல், சி.வீர துங்கவிடம் தெரிவித்துள்ளார்.

மோதல் சம்பவங்களின் போது பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தப்படுவது குறித்து மௌலானா எம்.பி வேதனையும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் சிவிலியன் உயிரிழந்துள்ளதோடு 16 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் மௌலானா எம்.பி சுட்டிக் காட்டினார்.

இவ்வாறான நிகழ்வுகள் தவிர்க்கப்படவேண்டுமென்றும் மௌலானா எம்.பி கேட்டுள்ளார்.

## கொழும்பிலும் இராமகிருஷ்ண மிஷன் இல்ல
## பவளவிழா நிகழ்ச்சி

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லப் பவள விழா கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைமையகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொதுச்செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்தாஜி மகராஜ் தலைமையில் நடைபெறவுள்ள பவள விழாவில் மேல் நீதி மன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், வடக்கு கிழக்குப் புனர் வாழ்வு, தமிழ் விவகார இந்துக் கலாசார அமைச்சின் செயலா எள்.வி.ரகுநாதன்,முன்னாள் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை 6 மணி முதல் நிகழ்ச்சிகள் நடைபெறுமென இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளைத்தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜி தெரிவித்துள்ளார்.

## வந்தாறுமூலையில் கோழிக் குஞ்சு விநியோகம்.

(அரியம்)

வந்தாறுமூலை கால்நடை வைத்தியக் காரியாலயத்தில் எதிர்வரும் 28ந் திகதி வியாழக்கிழமை கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உயர்ரக குஞ்சுபொரிப்பு நிலையமான உப்புவெளிப்பண்ணையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஒருவின கோழிக்குஞ்சுகளில் இறைச்சிக் கோழிக்குஞ்சுகளும் மற்றும் சேவல் பேட்டுக் குஞ்சுகளும் விநியோகிக்கப்படவுள்ளதாக வந்தாறுமூலை கால்நடை வைத்தியக் காரியாலயங்கள் தெரிவித்தன.

ஒரு நாள் இறைச்சிக் கோழிக் குஞ்சின் விலை 35 ரூபாவாகவும் சேவல் குஞ்சுகள் 5 ரூபாவாகவும் திணைக்கள் விலையில் விற்பனை செய்யப்படும் எனவும் தெரிகிறது.

இதேவேளை அடுத்த மாதம் (யூலை) கோழிக்குஞ்சு பெறவிருக்கும் பண்ணையாளர்கள் வந்தாறுமூலை காரியாலய வைத்திய காரியாலயத்தில் சென்று உடனடியாக முற்பணம் செலுத்தி தமக்குத் தேவையான கோழிக்குஞ்சுகளுக்கு பதிந்து லவக்கும் படியும் வேண்டப்படுகின்றனர்.

## விடுதலைப்புலிகளுக்கு
## செஞ்சிலுவைக் கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலை புலி உறுப்பினர்களுக்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் (ஐ.சி.ஆர்.சி) மட்டக்களப்பு அலுவலகத்தினால் பரப்புரை கருத்தரங்கு ஒன்று கடந்த 02.06.2001 சனிக்கிழமை நடத்தப்பட்டது. இதில் ஆண்களும் பெண்களுமாக சுமார்70 உறுப்பினர்கள் பங்கு பற்றினர்.

இப்பரப்புரைக் கருத்தரங்கின் போது போரில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை விதிகள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டதோடு இந்தப் பிராந்தியத்திலும் இலங்கையிலும் ஐ.சி.ஆர்.சியின் பணிகள் பற்றிய கேள்விகளுக்கும் விளக்கமளிக்கப்பட்டது. மட்டக்களப்பு ஐ.சி.ஆர்.சி பேராளர்களும் ஐ.சி.ஆர்.சி கொழும்புத் தலைமைய பரப்புரை உத்தியோகத்தரும் இப் பரப்புரைக் கருத்தரங்கில் பங்கு பற்றினர்.

மோதலில் சம்மந்தப்பட்டுள்ள சகல தரப்பினருக்கும் ஐ.சி.ஆர்.சி இவ்வாறான பரப்புரைக் கருத்தரங்குகளை நடத்துகின்றது. கடந்த மாதம் அம்பாறை, மட்டக்களப்பு ,பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச பாதுகாப்புப் படையினருக்கும் மட்டக்களப்பு ஐ.சி.ஆர்.சியினால் பரப்புரை கருத்தரங்குகள் நடத்தப்பட்டது.

## கிழக்கு மாகாணத்தில் மீலாதுன் நபி விழா

(காத்தான்குடி நிருபர்)

புனித மீலாதுன் நபி கொண்டாட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் சமய அனுஷ்டானங்களுடன் கொண்டாடப்பட்டன. பள்ளிவாயல்கள், தைக்காக்கள், ஸாவியாக்களில் நபிகள் நாயகத்தின் பெயரிலான மௌலீது வைபவங்கள் தமாம் செய்யப்பட்டதுடன் விஷேட பிரார்த்தனை வைபவங்களும் நடைபெற்றன.

காத்தான்குடி, கல்முனை, ஏறாவூர்,ஓட்டமாவடி, அக்கரைப்பற்றுப் பகுதிகள் உட்பட கிழக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் மீலாத் நபி கொண்டாட்டங்கள் அமைதியான முறையில் இடம் பெற்றுள்ளன.




மட்டக்களப்பு மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கம் அண்மையில் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்திய வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய அணியினை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மாநகர ஆணையாளர் எஸ். நவநீதனுக்கு மட்/வலைப்பந்தாட்டச் செயலாளர் செசான் இராஜேந்திரம் அறிமுகப்படுத்தி வைப்பதை படத்தில் காணலாம்.
(படம்:- வேதாந்தி)

## கொக்கட்டிச்சோலையில் அடியார்களுக்கு அன்னதானம்

(அரியம்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்ற வருடாந்த சங்காபிஷேக விழாவில் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து சிறப்பித்தனர்.

கடந்த வருடம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற 1008 சங்குகளிலான அபிஷேக விழாவினை ஆலயபிரதமகுரு மு.கு.சச்சிதானந்தக குருக்களின் தலைமையில் வ.சோதிலிங்கக் குருக்கள், மு.க.சபாரெத்தினம் குருக்கள் ஆகியோர் முன்னின்று நடத்தினார்கள்.

அன்றைய தினம் மழை தொடர்ந்து பெய்த போதும் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் மழையினையும் பொருட்படுத்தாது சங்காபிஷேக விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

## அமைச்சரிடம் நஷ்ட ஈட்டு கோரிக்கை மனு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு, பிரதேச கன்னங்குடாக் கிராமத்தில் 1990 ம் ஆண்டு வன்செயல் காரணமாக 19 வீடுகள் எரிக்கப்பட்டு முற்றாக சேதமாக்கப்பட்டது. இவ் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததைத் தொடர்ந்து,

வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கன்னங்குடா கிராம மக்கள் தமது எரிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தரக்கோரி மகஜர் ஒன்றை ஈ.பி.டி.பி அலுவலகத்தில் அலுவலகப் பொறுப்பாளர் பரணிதரன் பிரதிபனிடம் கையளித்தனர்.

இம்மகஜரில்,பாதிப்படைந்த கோயில்கள் வைத்தியசாலையின்மை, பாடசாலைகளின் குறைபாடுகள் தொடர்பாகவும் இவற்றைக் கவனத்தில் பொண்டு கிராம வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டும் எனவும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**காணி விற்பனைக்கு**

16/6, திருச்செந்தூர், கல்லடி முகத்துவாரம் மட்டக்களப்பிலுள்ள, கிணறு, மலசலகூடம், மின்சார வசதி, பயன்தரும் மரங்களும் கொண்ட 20 பேச் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கீழ் குறிப்பிடும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

065-24065

# கதிர்காம பாத யாத்திரை
# திருமலையில் ஆரம்பம்

(அரியம்)

கதிர்காம அடியார்கள் தர்ம நிலையத்தினால் இம்மாதம் 10ம் திகதி திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து கதிர்காமத் திருத்தலத்தை நோக்கிய பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் யூலை 19ம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையவுள்ள இப்பாதயாத்திரிகர் குழுவில் இணைந்து கொள்ளும் அடியார்கள் பாதயாத்திரைகள் பிரதிநிதி பாட்ரிக் ஹரிகரன் அவர்களுடன் தொடர்பு கொள்ளும் படி வேண்டப்படுகின்றனர்.

திருகோணமலையில் இருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரையானது மூதூர், பட்டித்திடல், கிளிவெட்டி, மாவடிச்சேனை, வெருகல், கதிரவெளி, வாகரை சித்தாண்டி, மாமாங்கம், ஆரையம்பதி, மண்முனை, கொக்கட்டிச்சோலை, மண்டூர், களுவாஞ்சிகுடி, பாண்டிருப்பு, கல்முனை , அக்கரைப்பற்று, தம்பிலுவில்,சங்கமான்கண்டி, கோமாரி, உகந்தை, நாவலடி, மடு வழியாக கதிர்காமத்தை சென்றடைய சுமார் 40 நாட்கள் செல்லும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

அடியார்கள் தங்கும் ஆலயங்கள் பற்றிய விபரம் சம்மந்தப்பட்ட ஆலயங்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்ட சம்மந்தப்பட்ட ஆலயங்களுக்கு வரும் பாதயாத்திரை அடியார்களுக்கு வேண்டிய உதவிகளை ஆலயத் தர்மகர்த்தாக்கள் செய்யும் படியும் வேண்டப்படுகின்றனர்.

வருடாவருடம் இடம் பெறும் இப்பாதயாத்திரையில் விரும்பிய அடியார்கள் இணைந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நேபாளத் தலைநகரில் மீண்டும் 12 மணி நேர ஊரடங்கு அமுல்

## படுகொலைகள் பற்றி விசாரிக்க ஆணைக்குழு நியமனம்

உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

(காத்மண்டு)

**நே**பாள மன்னர் பிரேந்நதிராவின் குடும்பத்தினர் அரண் மனைக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டது சம்மந்நதமாக உண்மை விபரங்கள் வெளியிடப் படாததால் ஆத்திரமடைந்துள்ள நேபாள மக்கள் வன்செயல்களில் இறங்கியதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாண்டு நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்றுக்காலை காத் மண்டு நகரில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்று மதியம் தொடக்கம் மேலும் பன்னிரெண்டு மணி நேரத்துக்குபிறப்பிக்கப்பட்டது.

இதேசமயும் அரண்மனையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த இப்போதைய புதிய மன்னர் கயனேந்திராவின் இளைய சகோதரர் நரேந்திர விக்ரம்ஷா நேற்று மருத்துவமனையில் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

நரேந்திர விக்ரம்ஷா 1989ம் ஆண்டில் வெள்ளைக் காரப் பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டதால் முடிக்குரிய பட்டத்தை இழந்தார். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த போது இவரும் அரண்மனையிலிருந்தார்.

இதே சயம் சம்பவத்தின் போது அரண்மனையிலிருந்த இப்போது முடிசூட்டிக் கொண்டுள்ள கயனேந்திராவின் மகன் பாராய்ஷா காயமெதுவுமின்றித் தப்பித்திருக்கிறார்.



1990 இல் மன்னர் பிரேந்திரா குடும்பம்

### சதித்திட்டங்கள் பற்றி மக்கள் சந்தேகம்

நேபாள மன்னரும் மகாராணி மற்றும் இரு பிள்ளைகள் உட்பட பத்துப்பேர் அரண்மனைக் குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டது சம்மந்தமாக முதலில் இளவரசர் திபேந்திராதான் கொலை செய்தாரென்று கூறப்பட்டது. பின்னர் தானியங்கித் துப்பாக்கி தானாக வெடித்தது இவர்கள் கொல்லப் பட்டார்கள் என்று மன்னராக முடி சூட்டிக் கொணட கயனேந்திரா விளக்கம் கொடுத்தார். இந்த விளக்கங்களில் மக்கள் திருப்பி யடையவில்லை. காபந்து மன்ன ராக இருந்து இப்போது புதிய மன்னராக முடிசூடிக் கொண்டுள்ள கயனேந்திராவுக்கும் அவனது மகன் பராஷாவுக்கும் இக்கொலையில் சம்மந்தமிருக்கலாம் என்றும் மக்கள் சந்தேகிக்கின்றனர். இதேசமயம் இந்தியாவுக்கும் மன்னர் குடும்பக் கொலைகளுக்கும் சம்மந்தம் இருக்கலாமென்ற வதந்தியும் நேபாளத்தில் பரவியிருக்கிறது. இந்த வதந்தியை இந்தியர் மறுத்திருக்கிறது. புதுடில்லியிலி ருந்து வெளிவரும் "ரைம்ஸ் ஓவ் இந்தியா" பத்திரிகை இளவரசர் திபேந்திரா துப்பாக்கியை கையில் ஏந்தியுள்ள படமொன்றை பத்திரிகையில் பிரசுரித்ததால் அந்தப் பத்திரிகையின் பிரதிகளை தீயிட்டுக் கொழுத்தியதுடன் இந்தியாவுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

இதே சமயம் நேபாள இராணுவத்துக்கும் இக்கொலைகளுக்கான சதித்திட்டத்தில் பங்கிருப்பதாகவும் மக்கள் சந்தேகிக்கின்றனர். வெளிநாட்டுச் சக்திகயுளும் இக்கொலையில் பங்கு கொண்டிருப்பதாகவும் மக்கள் கருதுகின்றனர்.

### விசாரணைக் குழு 3 நாளில் அறிக்கை

மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பத்தினரும் அரண்மனைக்குள்ளேயே சுட்டுக் கொல்லபட்ட துயரச் சம்பவம் பற்றி பூரண விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு விசாரணைக் குழுவை மன்னர் கயனேந்திரா நியமித்திருப்பதாக மன்னர் மாளிகை அறிக்கை ஒன்ற தெரிவித்திருக்கிறது. மூன்று தினங்களுக்குள் இந்தக் குழு தனது அறிக்கையைச் சமர்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதுவரை ஆட்சியிலிருந்த மன்னர் பிரேந்திரா முடியாட்சியுடன் அரசமைப்பு ரீதியாக பாராளுமன்ற ஆட்சியையும் இணைத்து நடத்தி வைத்தார். இப்போது பதவி ஏற்றுள்ள மன்னர் கயனேந்திரா நேபாளத்தில் பழையபடி முடியாட்சியைக் கொண்டுவரவே திட்டமிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

❋❋❋❋

---

### கொல்லப்பட்டவர்களின் இறுதிச் சடங்கில் பழிக்கோஷம்

(டெல்சுவிஸ்)

**பா**லஸ்தீன தற்கொலைக்குண்டுதாரியினால் கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களில் பதினான்கு பேரின் சடலங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அடக்கம் செய்யப்பட்டபோது ஆறாத் துயருடன் இந்தக் கொலைக்குப் பழி வாங்க வேண்டுமென்ற கோஷங்களும் ஆத்திரத்துடன் வெளியிடப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்வர்களில் பெரும் பாலானவர்கள் இளைஞர்கள். இவர்கள் சோவியத் யூனியனிலிருந்து கட்டுப்பாடற்ற முறையில் இஸ்ரேலுக்கு வரலாமென்ற முறையில் கடந்த வெள்ளிக் கிழமை இஸ்ரேலுக்கு வந்தனர்.

16வது பிறந்த நாளை இன்னும் பத்து தினங்களில் கொண்டாவிருந்த அனயா கொஸச் சேவ் என்ற மங்கையின் தாய், மகள் கொல்லப்பட்டதை தாங்க முடியாமல் கதறியழுத போது அவரது மகனும் மற்றும் சிலரும் பெரும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தினர்.

இஸ்ரேலில் வாழ விரும்பினால் மேல் படிப்பை முடித்துக்கொண்டு இராணுவத்தில் சேருவதாக அந்தப் பெண் கூச்சலிட்டார்.

---

# குடிநீர் பெற்றுக்கொள்வதற்கு......................

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாறை மாவட்டத்தில் கிராமக் குளங்கள் என்று சொல்வதற்கு இடமில்லாதவாறு அந்தக் குளங்கள் எல்லாம் வயல் நிலங்களாகவும், கடைத் தெருக்களாகவும் குடிமனைகளாகவும் மாற்றம் செய்யப்பட்டுக் கொண்டு வருவதும் குடிநீருக்கு ஏற்பட்ட ஒரு அச்சுறுத்த லாகும். முன்பு எல்லாம் கிராமக் குளங்களில் நீர் தேங்கியிருந்தது. இதனால் கிணறுகளில் போதுமான எவு நீர் இருந்தது. இப்போது குளங்கள் இல்லாத காரணத்தி னால் கிணறுகளில் நீா இல்லாது போய்க் கொண்டிருக்கிறது. குடி மக்கள் அதிகரிப்புக்கு ஏற்றவாறு மலசலகூடங்களும் அதிகரிக்கப்பட்டமையால் குடிநீர் மாசடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசத்திற்கு அம்பாறை, கொண்ட வெட்டுவான் சேனநாயக்க சமுத்திரம் போன்றவைகளில் இரந்து குழாய் நீா வசதிகள் ஏற்படுத்தினாலும் கூட அது முழுமையாக வெற்றியளிக்குமா? என்ற ஒரு நிலை இருக்கிறது. இதற்கு உதாரணம் அம்பாறையில் கல்லோயா அபிவிருத்திச் சபையின் 50 வருடங்களுக்க முன்பு குழாய் நீா திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு ஜனத் தொகைக்கு ஏற்றவாறு பல மாற்றங்கள் செய்யப்பட்டு தற்போது குழாய் நீா வடிகால் அமைப்புச் சபையின் நிர்வாகத்தின் கீழ் செயல்படுகிறது. குழாய் நீா பாவனையாளர்கள் வரியும், செலுத்துகிறார்கள். ஆனால் இன்னும் தேவையான அளவுக்கு குழாய் நீா வசதிகள் இல்லாது இருந்து வருகிறது. தமணைப் பகுதியில் உள்ள குடியேற்ற வாசிகளுக்கு எக்கலாற்றில் இருந்து ஒரு குழாய் நீா திட்டம் மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது விவசாயத்துக்குத் தேவையான நீா பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும் பட்சத்தில் விவசாயிகள் தங்கள் பிரதேசத்தை தாண்டி செல்லும் குழாய்களை சேதப்படுத்த வேண்டிய நிலை உருவாகுமென்பதற்கு முன் எச்சரிக்கையில் சடையந்தளாவையில் நடைபெற்ற சம்பவம் பாடமாக அமைந்திருக்கிறது.

இப்படியான பிரச்சினைகள் இருக்கும் போது அம்பாறை மாவட்டத்தை இரு மாவட்டமாகப் பிரிக்கு வேண்டுமென்று குரல் கொடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது. இதே நேரத்தில் நாடு சுதந்திரம் கிடைத்து அரை நூற்றாண்டு காலத்தில் ஆட்சி செலுத்திய ஐக்கிய தேசியக் கட்சி மக்களை ஐக்கியமாக வைத்திருந்தால் இந்நத நிலமை ஏற்பட்டிருக்க மாட்டாது.

மட்டக்களப்பிலிருந்து அம்பாறை மாவட்டம் உதயமான காலத்தில் ஏழு பிரிவுக்காரியாதிகாரி பிரிவுகள் இருந்தன. அவைகள் சிங்களம், முஸ்லீம். தமிழ் என்று இல்லாது செயல்பட்டு வந்தது. இன்று இந்த 6 பிரிவுக்காரியாதி காரிகளின் பிரிவுகளும் 16 பிரதேச செயலாளர் பிரிவுகளாகவும், 4 உத்தியோகப் பற்று அற்ற பிரதேச செயலாளர் பிரிவுகளாகவும் செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரிவுகள் எல்லாம் இன ரீதியாக ஏற்படுத்தியதே. இன்று கரையோர மாவட்டம் கோருவதற்கு காரணமாக அமைந்திருக்கிறது. இன்று கரையோர மாவட்டம் கோரும் அரசியல்வாதிகள் காரைதீவு, கல்முனைத் தமிழ் பிரிவு சவளக்கடை ஆகிய இடங்களிலுள்ள இன ரீதியான தமிழ் பிரதேச செயலகங்களின் நிர்வாகத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்களா? என்பது ஒரு பிரச்சினை. இதே நேரத்தில் முஸ்லீம்களுக்காக உருவாக்கப்பட்ட சாய்ந்தமருதுப் பிரதேச செயலகப் பிரிவும் ஒழுங்கான எல்லைகள் இல்லாது பிரச்சினையாகவே இருக்கிறது. இதே போன்று அக்கரைப்பற்றிலும் ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களாகியும் இன்னும் எல்லை சரியாகவே இல்லை.

இன்றுள்ள நிலையில் எந்தப் பிரிவுகளும் இல்லாது முன்பு இருந்தது போன்று 6 பிரிவுக்காரியதிகாரி பிரிவுகளாக மாற்றம் செய்யப்பட்டு அம்பாறைக் கச்சேரியில் சிங்களவர் அரசாங்க அதிபராக இருந்தால், மேலதிக அரசாங்க அதிபர் தமிழராகவும், காரியாலய உதவியாளர் ஒரு முஸ்லீமாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு திணைக்களத்திலும் சிங்களவரும். தமிழர்களும், முஸ்லீம்களும் செயல்படக் கூடிய முறையில் நிர்வாகம் செயல்பட வேண்டும். இல்லாது இப்படி இன ரீதியாக பிரிவுகள் ஏற்படுத்த வேண்டிய ஒரு நிலமை ஏற்பட்டால் இந்த மாவட்டம் மாறி மாறி ஒரு யுத்த களமாகவே இருக்குமென்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

# பாறைகளும் கனியங்களும்

தினக்கதிர் ஆசான்

(சென்ற வாரத் தொடர்ச்சி....)

| களிமண் | இயல்புகள் / பயன் |
|---|---|
| தீக்களி | செங்கல் தயாரிப்பு, வெப்ப உபகரணம் தயாரிப்பு |
| பந்துக்களி | சாதாரண பீங்கான் தயாரிப்பு |
| கயோலின் அல்லது வெண்களி | பொசிலின், மின்காவலி உபகரணம் |
| ஓட்டுக்களி | செங்கல், ஓடு, சட்டி, பானை தயாரிப்பு |
| சீமெந்துக்களி | சீமெந்து தயாரித்தல் |

### தொலமைட்:-

இது $Mgco_3;CaCo_3$ போன்ற கனிமம் 1:1 என்ற விகிதத் தில் காணப்படும். இது இலகுவில் பிரிகையடையாது. நீரில் இலகுவாகக் கரையாது. இதனால் தேயிலை, றப்பர், கோப்பித் தோட்டங்களில் பசளையாக பயன்படுத்தப்படுகிறது. இது பதுளை, நாலந்த போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படும்.

### அப்பறைற்று:-


இது பொசுபரசு மூலகத்தைக் கொண்ட $Ca_3(PO_4)_2$ கனிமமாகும். இது நீரில் குறைவாகக்கரையும் இயல்புடையது. இலங்கையில் பெருந்தோட்டப்பயிர்களுக்கு நுண்துளாளாக்கி பசளையாக பயன்படுத்தப்படுகிறது. மேலை நாடுகளில் இக் கனிமம் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுப்பர் பொஸ்பேற்றாக மாற்றிப்பெறப்படுகின்றது. அப்பறைற்றில் 35% பொசுபரசு (P) காணப்படுகிறது. இது எப்பாவல எனும் பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

### காபன்:-

இம் மூலகம் அதன் கட்டமைப்பின் அடிப்படையில் இரண்டு வடிவங்களாகக் காணப்படுகின்றது.


1. காரியம் அல்லது பென்சிற்கரி
2. வைரம்

**1. காரியம்**



இந்த C அணுக்களுக்கிடையே வந்தர்வால்சின் பிணைப்பு காணப்படுகின்றது. இதனால் உராய்வு நீக்கியாகவும் எழுது கருவியாகவும் பயன்படுத்தப்படுகிறது. உறுதி குறைந்தது.

**2. வைரம**




இந்த C அணுக்களுக்கிடையே உறுதியான பிணைப்பு காணப்படும். இது ஏனைய பொருள்களை வெட்டும் பொருளாகவும் பயன்படும். இது ஒளியை வெவ்வேறு கோணங்களில் முழுவுட் தெறிப்படையச் செய்யும்.

## சீமெந்து தயாரிப்பு

சுண்ணக்கல், களிமண், ஜிம்சம் 3:1 என்ற விகிதத்திலும் ஜிப்சம் 2% சேர்த்து அரைக்கும் போது சீமெந்து பெறப்படுகின்றது. சுண்ணக்கல்லும் சீமெந்தும் அரைத்துப் பெறப்படுவது கிளிங்கர் ஆகும்.

இது முக்கல்சியம் சிலிக்கேற் $Ca_3S_1$
இருக்கல்சியம் சிலிக்கேற் $Ca_2S_1$
முக்கல்சியம் அலுமினேற் $Ca_3A_1$ ஆகியவற்றைக் கொண்டது.

கிளிங்கற் உறுதித்தன்மை கூடியது. இறுகும் தன்மை உடையது. இறுகும் தன்மையைக் குறைப்பதற்கு 2% ஜிப்சம் சேர்க்கப்படும்.




### சீமெந்து சாந்தின் வகைகள்

1. சுண்ணாம்புச் சாந்து
2. வலிதாக்கிய சீமெந்து சாந்து
3. கொங்கிறீட் கலவை.

**கதிராமத்தம்பி பாஸ்கரன்**
ஆசிரியர்
மட் / களுதாவளை மகா வித்தியாலயம்
களுதாவளை

(தொடரும்......)

# கணிதம்

## க.பொ.த.(சா-த) 2001

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய நடைபெறவிருக்கும் க.பொ.த(சா-த) பரீட்சைக்கு அமைவாக மாணவர்களைத் தயார் செய்யும் நோக்கில் கணித பாடம் இங்கு கற்பிக்கப்படுகிறது.

க.பொ. த(சா/த) பரீட்சையில் கணித பாட வினாத்தாள்களை நோக்கும்போது அநேகமாக கடைப்பிடிக்கும் ஒழுங்கிற்கு ஏற்ப முதலாவது வினாவில் மூன்று விடயங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

i.காரணிப்படுத்தல்
ii.ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்த்தல்
iii.இருபடிச்சமன்பாடுகளைத் தீர்த்தல்

இப்போது காரணிப்படுத்தல் எனும் பாடத்திலிருந்து ஆரம்பிப்போம்.

### காரணிப்படுத்தல்

பாடத்திட்டத்திற்கு அமைய தரம் 11வரை கற்பிக்கப்படும் காரணி தொடர்பான விடயங்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

* பொதுக்காரணி
* மூவுறுப்புக் கோவையை காரணிப்படுத்தல்
* இருவர்க்கங்களின் வித்தியாசமான கோவைகளைக் காரணிப்படுத்தல்
* இரு கனங்களின் கூட்டுத் தொகை
* இரு கனங்களின் வித்தியாசம்

**i.பொதுக்காரணியை வேறுபடுத்தல்-**

அட்சரக்கணிதக் கோவை யொன்றைக் காரணிப்படுத்தும் போது அக்கோவையில் பொதுக் காரணி இருக்கிறதா? எனக் கவனிக்க வேண்டும்.

உ-ம்:

1.$9a^2-6ab$

இங்கு தரப்பட்டுள்ள இரண்டு உறுப்புக்களிலும் பொதுக் காரணியை நோக்குவோம்.

$9a^2 = 3 \times \boxed{3} \times \boxed{a} \times a$
$6ab = 2 \times \boxed{3} \times \boxed{a} \times b$

இரண்டு உறுப்புக்களிலும் காணப்படும்
பொ.கா. =3a

∴ 3a ஐ வெளியால் எடுத்து அடைப்புக்குறிக்குள் மிகுதியை எழுதி விடையைப் பெறுவோம்.

$9a^2-6ab$
$=\underline{3a(a-2b)}$

குறிப்பு: அடைப்பை நீக்கி பெருக்கிப் பார்ப்பதன் மூலம் விடையைச் சரிபார்த்துக் கொள்ளலாம்.

மேலும் உ-ம்:

1.$3x^2+9xy-3x$
இக்கோவையில் 3xபொ.கா
∴ $3x(x+3y-1)$

மாணவர்கள் விடும் தவறொன்று உள்ளது. அதாவது விடையை எழுதும் போது $3x(x+3y)$ என எழுதுவார்கள் இது பெரியதவறாகும்.

கோவையில் எத்தனை உறுப்புக்கள் உள்ளதோ அடைப்பினுள் அத்தனை உறுப்புக்களும் வர வேண்டும்.

2. $-18ab-12abc$

இங்கு -6ab யை பொதுக்காரணியாக வேறுபடுத்துவோம்.

$-18ab-12abc$
$= -6ab(3+2c)$

இங்கு 6abயையும் பொ.காரணியாக வேறுபடுத்தலாம். --

$18ab-12abc$
$= -6ab(-3-2c)$

**பொதுக்காரணி -II**

உ-ம் (i) $3m(2-v)-3(2-v)$

இங்கு (2-v) என்னும் ஈருறுப்புக் கோவை பொதுக்காரணியாகும்.

எனவே (2-v) ஐ வேறுபடுத்தி எழுதுவோம்.

$3m(2-v)-3(2-v)$
$= (2-v)(3m-3)$

ii) $6x^2-4x+9x-6$

இவ்வாறு தரப்படுமிடத்து சோடி சேர்த்து உறுப்புக்களை எழுதி பொ.காரணியை வேறுபடுத்த வேண்டும்.

$6x^2-4x+9x-6$
$=(6x^2-4x)+(9x-6)$
$=2x(3x-2)+3(3x-2)$
$=(3x-2)(2x+3)$

iii) $pq-r-pr+q$

இங்கு சோடி சேர்க்க முன்பு பொருத்தமான சோடி அமையும் வண்ணம் உறுப்புக்களை இடமாற்றம் செய்ய வேண்டும்.

$pq-r-pr+p$
$= pq+q - pr-r$
$= (pq+q)-(pr+r)$
$= q(p+1) -r(p+1)$
$= (p+1)(q-r)$

iv) $a(a-c) -b(b-c)$

இங்கு பொ.கா தரப்படவில்லை. என்வே அடைப்பை நீக்கி சோடி சேர்த்துக் காரணிபப்படுத்தல் வேண்டும்.

$a(a-c)-b(b-c)$
$=a^2-ac-b^2+bc$
$=(a^2-b^2)-(ac-bc)$
$=(a+b)(a-b) -c(a-b)$
$=(a-b)(a+b-c)$

**இருபடி மூவுறுப்புக் கோவையைக் காரணிப்படுத்தல்.**

இக் கோவையின் நியம வடிவம் பின்வருமாறு:-

$ax^2+bx+c$

இப்படியான கோவையொன்றை எவ்வாறு காரணிப்படுத்தலாம். எனப்பார்ப்போம்.

உ-ம்: (i) $x^2+8x+12$

**படிமுறைகள்**

நடு உறுப்பை இரண்டு உறுப்புக்களாக வேறுபடுத்தி நான்குறுப்புள்ள கோவையாக எழுதவேண்டும். அதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.

i) $x^2$ இன் குணகத்தையும் மூன்றாம் உறுப்பான எண் உறுப்பையும் பெருக்க வேண்டும்.
$1 \times 12=12$

ii) அட்பெருக்கத்தின் காரணிச் சோடிகளில் கூட்டுத்தொகை 8 வரக்கூடிய சோடியைக் காணவேண்டும்.

iii) அச்சோடியை நடு உறுப்புக்குப் பதிலாக எழுதுவதன் மூலம் மூவுறுப்பு,நான்குறுப்பாக வடிவம் பெறும்.

$12=2 \times 6$
+
8

$x^2+8x+12$
$=x^2+6x+2x+12$
$=(x^2+6x)+(2x+12)$
$=x(x+6)+2(x+6)$
$=(x+6)(x+2)$

(ii) $4m^2+8m+3$

$4 \times 3=12$
$12=6 \times 2$

$=4m^2+6m+2m+3$
$=(4m^2+6m)+(2m+3)$
$=2m(2m+3)+1(2m+3)$
$(2m+3)(2m+1)$

(iii) $5x^2-16xy+3y^2$

$5 \times 3=15$
$15=15 \times 1$
16

∴ $5x^2-15xy-xy+3y^2$
$=(5x^2-15xy)-(xy-3y^2)$
$= 5x(x-3y) - y(x-3y)$
$=(x-3y)(5x-y)$

(iv) $2x^3-x^2y-3xy^2$

இங்கு பொ.கா=x
$=x(2x^2-xy-3y^2)$

$2 \times -3=-6$
$-6=-3 \times 2$

$=x(2x^2-3xy)+(2xy-3y^2)$
$=x\{(2x^2-3xy)+(2xy-3y^2)\}$
$=x\{x(2x-3y)+y(2x-3y)\}$
$=x(2x-3y)(x+y)$

**வே.தவராஜா**
மட் / புனித மிக்கேல் கல்லூரி

### பயிற்சிகள்

**காரணிப்படுத்துக**

1. $16m-64m^2n$
2. $b^2-b^3$
3. $2c^2d^3-6c^3d^2$
4. $3x^3-x^2y+xy^2$
5. $p(m-n) -q (m-n)$
6. $2ax-ay+2bx-by$
7. $ax-bx+by+cy-cx-ay$
8. $x^2+4x+3$
9. $a^2-11x+24$
10. $2y^2-3y-5$
11. $(a+2b)^2-5(a+2b)+6$
12. $3x^2+2x-5$
13. $14-5p-p^2$
14. $x^2-8xy+12y^2$
15. $2x^3-x^2y-3xy^2$

(தொடரும்)

ஆசான் பகுதியில் வருகின்ற கணிதப் பாடம் தொடர்பாக எழுகின்ற சந்தேகங்களை எழுதி தினக்கதிர் முகவரிக்கு அனுப்பி வைத்தால் விளக்கம் தரப்படும்.

# குண்டாஞ் சட்டிக்குள் குதிரை ஓட்டப் பார்க்கும் அரசியல்வாதிகளே; கரைஓர மாவட்டம் கேட்பவர்கள்.

ஈழபாரதி
மருதூர்வாணர்

### கொண்டைவெட்டுவான் பிரதேசம்

1948க்கு முன் மருதமுனை, நீலாவணை கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு,சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில், இறக்காமம், வருப்பத்தாஞ்சேனை,கணங்காடு,நாவலாறு, மூங்கிலாறு அடங்கிலும் ஏக முஸ்லீம், தமிழர், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக விவசாயம் செய்து வாழ்ந்த பிரதேசங்களுக்கு மத்திய பூமி கொண்டை வெட்டுவான் பிரதேசம் என்பது வரலாற்றுண்மை. அம்பாள் கோயிலடி, கல்வெட்டு அகழ்வாராய்ச்சி, புளியந்தீவு, எறாவூர்பற்று கல்வெட்டு நூல்களின் ஆராய்வுகளை இன்றைய அரசியல்வாதிகள் படிக்கவில்லை போலும்.

கல்லோயாக் களனிக் குடியேற்றத் திட்டம் 49-50ல் வந்த வேளை சம்மாந்துறை நீர்ப்பாசன எஞ்சினியர் இஸ்மாயில் துரை அவர்களும், கோட்முதலியார் காரியப்பர், அரசாங்க அதிபராயிருந்த ஏ.எம்.ஏ அஸீஸ் போன்றவர்களும் மேற்கூறிய கொண்டை வெட்டுவான் பிரதேச விவசாயிகளை அழைத்து காணிக் கச்சேரி நடாத்திய காலங்களில் நாவலாற்று மூங்கிலாற்று வெள்ளப் பெருக்கினால் விளைந்த வயல்களும் காலத்துக்குக் காலம் அழிவுற்ற காரணிகளால் நாவலாற்றை மறித்து அணைக்கட்டுப் போட ஆலோசித்தனர். கொண்டை வெட்டுவான் குளத்தை முதலில் அணைகட்டி நீர்ப்பாசன வசதி செய்த்வேளை முதலாவது பிரதமர். டி.எஸ்.சேனநாயக்கா அவர்களே தலைமை தாங்கினார். அக்காலத்தில் பாடாகொடை, கொக்கு நாரை, தமனை போன்ற சேனைக்காடுகளில் நாற்பதைம்பது வேடுவச்சிங்களவர் களே வாழ்ந்தனர்.

இந்த வரலாறு , 1949க்கு முன்பு, பின்னர் இங்கினியாகலை மலையையும் பாகொடை மலையையும் நடுவகித்து நாவலாறு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்ததை அணைக்கட்டுப் போட முனைந்த காலம் ஆங்கிலேய நாடுகளின் ராட்சத மெஷின்கள் தேவைப்பட்டன.

### தமிழரசுக் கட்சியின் முன் யோசனைகள்

கல்லோயா, களனிக் குடி, வன்னிநாயக்கா போன்றவர்களின் அமைச்சரவையில் இங்கினியாகலை மலைகளை ஊடுருவிப்பாயும் நாவலாற்றை வழிமறித்துக் கட்டிய அணைக்கட்டுத் தான் சேனநாயக்கா சமுத்திரம் எனப் பெயரிட்டனர். அதற்கு முன் சம்மாந்துறை கல்முனை கரவாகுப்பற்று,மருதமுனை விவசாயிகள் நாவலாற்று ஓரங்களினூடாக தும்பக்காவழி, மொனறாகலை வரை விவசாயம், தோட்டம் செய்தனர். பல ஆயிரக்கணக்கான நிலங்களை விட்டு வெளியேறச்செய்து அவர்களுக்குரிய நட்டஈடாக இங்கினியாகலை குளம் கட்டிய பின்னர் கிழக்கேயுள்ள கொண்டை வெட்டுவான் பிரதேசக் காணிகளை பகிர்ந்தளிக்க வாக்குறுதி கொடுத்தனர். காடுகளை இராட்சத மெஷின்கள் தள்ளிப் பிடிங்கித் தரைமட்டமாக்குமுட்டும் காடு, மலை வனாந்தரம் தேவையில்லை என்ற சிங்கள அரசியல் வாதிகள் நிலங்கள் வளங்கள் செழிமைகளைக் காணக்காண வாயூறிக் கொண்டிருந்தனர்.

தமிழரசுக் கட்சியினர் செல்வநாயகம், ராசமாணிக்கம், காரியப்பர், மோர்சா சின்னலெப்பை போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளரிடம் ஒப்பந்தம் செய்தனர். கொண்டைவெட்டுவான் பிரதேச விவசாயிகளான பெரும்பான்மை முஸ்லிம்களுக்கு 60 வீதமும் தமிழர்களுக்கு 30 சதவீதமும் ஏனைய சிங்களவர்களுக்கு 10சதவீதமும், கொண்டைவெட்டுவான் பிரதேச முஸ்லீம்,தமிழ், சிங்களவர்களுக்கு மாத்திரமே பகிர்ந்தளிப்பதென்று.

1950-53வரை இங்கினியாகலை பிரதேசமெங்கணும் தென்னை, பலா, கமுகு, தோடை என அழகுரம்மியமாக கன்றுகள் சோலைகளாகிட நாலறை வீடுகள், பாடசாலைகள் 1ம், 2ம், 3ம் காணிகளில் காலி, மாத்தறை, சிங்கள ஏனைய பகுதியைச் சேர்ந்த மந்திரி ,எம்.பிகளின்வாக்காளர் ஒப்பந்தங்களை ஒருபுறம் தள்ளி விட்டு அத்துமீறிக் குடியேறினர். ஐக்கிய தேசியக்கட்சியினர், தமிழரசுக் கட்சியினர் உண்ணாவிரதம் மறியல் அஹிம்சை போராட்டங்களில் பார்லிமென்றுக்குள்ளும் போர்க்குரலெழுப்பியே வந்தனர்.

### சிங்கள தமிழ் வகுப்பு வாதம்

தமிழ் பேசும் மக்களின் முதுசம் நிலங்களைப் பறிக்க விட மாட்டோம். எங்கள் மொழி, நிலம், கலை, கலாசாரம், உத்தி யோகம் தரப்படுத்திவிட மாட்டோம், என்றெல்லாம் தமிழரசுக் கட்சியினர் சாத்வீகப் போராட்டங்களை நடாத்திட சிங்கள அரசுகள் சுதந்திரக் கட்சியும் தமிழர், முஸ்லீம்களை அடித்து துரத்திக் கொண்டே கொண்டைவெட்டுவான் பிரதேசங்களில் சிங்களவர்களை வாரி அள்ளி சிங்கள மயமாக்கியே வந்தனர். இந்த வரலாறுகளில் இனக்கலவரம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அப்பாடா..... இதுவரை பலநூறு கட்டுரைகளில் நானும் எழுதியவன் தான். இந்த 40 பேர் இருந்த வேடுவச் சிங்களவர்களைக் கொண்ட கொண்டை வெட்டுவான் பிரதேசம் என்ற பெயரை 1950ல் அம்பாறை என மாற்றி இதுவரை 3 இலட்சம் வாக்காளர்களை உருவாக்கியது சிங்கள் அரசுகளே!

### இன்று கல்முனை கரையோர மாவட்டம்

ஒரு சில உண்மைகளை முஸ்லீம் காங்கிரஸ் கட்சியினர் இன்று தெரிந்து புரிந்து கொள்ள வேண்டும். 1950ற்குப் பிறகு இங்கினியாக் குளத்து வடிகால் நீரை மாரி காலம் தகைத்து, கோடை காலம் அதாவது விவசாயம் பயிர், குடலை கதிர் காலங்களில் 10,2 0.50 கன அடி நீர் திறந்து விடுவார்கள். அதுவும் சிங்கள் விவசாயிகளுக்கு முதலிலும் தேவை பூர்த்தியானதும் பூட்டி விடுவார்கள். முஸ்லீம், தமிழர் நிலங்கள் பயிர்கள், விளைச்சல்கள் கருகும் தறுவாயில் போராடி மந்திரிகளிடம் முறையிட்டு பொலிஸார் போய் அச்சுறுத்தினால் 10,20கனஅடி திறந்து 2,3 மணி நேரத்தக்குள் பூட்டி விடுவார்கள். இங்கனமே அம்பாறை மாவட்டமாக இப்போதுள்ள நாம் சம்மாந்துறை நிந்தவூர், மருதமுனை கரைவாகுப்பற்று மக்களின் விவசாயக் காணிகள் இன்றும் நாவலாற்றுத் தும்பக்கா வழிவரை கொண்டை வெட்டுவான் பிரதேசமெல்லாம் தமிழர், முஸ்லீம், நிலங்கள் 90வீதம் பறிபோக எஞ்சியவைகளும் உள்ளன.

இந்த இக்கட்டினால் கல்முனை கரைஓர மாவட்டம் கேட்பவர்களுக்கு விவசாயமோ, நிலங்களோ இல்லாத அரசியல்வாதிகள் இவர்களின் குறிக்கோள் முஸ்லீம் காங்கிரசுக்கு வாக்குப் பலம் சேர்ப்பதுதான். அல்லது கல்முனைக் கரையோர மாவட்டத்தில் ஐ.தே.கட்சி வேறெந்த முஸ்லீம்களாவது அரசினர்க்குச் சரணங்கச் சாமி பாடி ஏதாவது சுயநல வேட்டையாட நினைப்பது தான்.

இவர்கள் கூறும் இன்னும் சில காரணங்கள் வட கிழக்கெல்லாம் தமிழர்களுக்கு 7 மாவட்டம் இருக்கிறது. முஸ்லீம்களுக்கொன்று கல்முனைக் கரையோர மாவட்டம் கேட்பது தவறில்லை என்பது. மட்டக்களப்பு மாவட்டம் முஸ்லீம் காங்கிரஸ், திருகோணமலை முஸ்லீம் காங்கிரஸ், வன்னி மாவட்டம் முஸ்லீம் காங்கிரஸ் என்றெல்லாம் முஸ்லீம்கள் பிரதிநிதிகளை முஸ்லீம் மாவட்டங்களில் இருந்து தானா தெரிவாகினார்கள்? இப்போது அம்பாறை மாவட்டத்தில் இருந்து தானே அதாவுல்லா, மஜீத், முகைதீன்,ரிஸ்வி,ஹனீபா ஐந்து பேர் தெரிவாகினீர்கள்? இது என்ன பித்தலாட்டம்? நீங்கள் பேசுவது அரசியலா? சுயநலமா?

இன்னுமொரு காரணம் ஒலுவில் துறைமுகம், இதுவெறும் பகல் கனவான கதை என்று ரொனிடிமெல் கூறி விட்டாரே. மற்றது ஒலுவில் (முஸ்லீம் பல்கலைக்கழகம் என்று தான் அமைச்சர் அஷ்ரப் அவர்களின் கனவு நனவாகி அவரே தேசியத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் என்று அதையும் சிங்கள மக்களுக்கும் பங்குபோட்டு விட்டுத் தான் அகால மரணமாகி விட்டார்.

3வது காரணம் அஷரப்பின் கனவுகளை நனவாக்குவது? அவரைத்தான் மர்மாகத் தொலைத்து விட்டார்களே. இன்னு மின்னும் நீலிக் கண்ணீர் வடிக்கிறீர்களே ...மாவனல்லையில் முஸ்லீம்களின் நிலையைப் பற்றிச் சிந்திக்கிறீர்களா?

இனி மேலாவது முஸ்லீம்- தமிழர் ஐக்கிய உறவுகளைப் பற்றிச் சிந்தியுங்கள். இன்னும் விரிவாகத் தெளிவுபடுத்துவேன்.

---

# குடிநீர் பெற்றுக்கொள்வதற்கு யுத்தம் செய்யவேண்டிய சூழ்நிலையில் தனி மாவட்டம் பயன் தருமா?

அம்பாறை மாவட்ட மடல்

பத்திரிகையாளர் வி.பி.சிவப்பிரகாசம்

இன்று நாட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும் பிரச்சினை அம்பாறை மாவட்டப் பிரச்சினையாகவே இருக்கிறது. யுத்தம் ஒருபுறம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மறுபுறம், இவைகளுக்கு மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை இப்படியான முக்கிய பிரச்சினைகள் இருக்கும் போது யுத்த மாவட்டத்தை இரு மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற ஒரு பிரச்சினையும் பிரிக்க கூடாதென்று ஒரு பிரச்சினையும் விஸ்வரூபமெடுத்து தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. இவைகளுக்கு மத்தியில் இந்த மாவட்டத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான குடிநீர் பெற்றுக் கொள்வது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதற்காக இந்த மாவட்டத்திலே மேலும் புதிதாக ஒரு பிரச்சினை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

4483 சதுர கிலோ மீற்றர் பரப்புள்ள பிரதேசம் இறுக 635332 பல இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 66,963 ஹெக்டயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. 1,12506 ஏக்கர் நெல்வயல்களுக்கும் 11188 ஏக்கர் கரும்புச் செய்கைக்கும் சேனநாயக்கா சமுத்திரத்தின் மூலம் நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படுகிறது. ஆனால் மக்களுக்குத் தேவையான சுத்தமான குடிநீர் பெற்றுக்கொள்வது பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

கல்லோயாத் திட்டம் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இதனால் மாவட்டத்தின் ஜனத்தொகை அதிகரிக்கப்பட்ட அளவுக்கு ஏனைய வசதிகள் அளிக்கப்படவில்லை. முக்கியமான குடிநீர் வசதிகள் கிடைக்கவில்லை. இன்னும் கல்லோயாக் குடியேற்றவாசிகள் அம்பாறை, இங்கினியாகலை ஆகிய இடங்களைத் தவிர மற்ற இடங்களில்' எல்லாம் வாய்காலில் செல்லும் நீரிலே தான் நீராடுவதும்,குடிப்பதற்குப் பாவிப்பதுமாக இருக்கிறது. மாவட்டத்தின் கரையோரப் பிரதேசமான பெரிய நீலாவணை முதல் குமண வரையுள்ள பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் குடிநீர் மாசடைந்து கொண்டு வருகிறது என்றும் முக்கியமாக கல்முனை சுற்று வட்டாரத்திலே இவை மோசமான நிலையில் இருக்கிறது என்றும் இது தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வு அறிக்கையின் பேரில் ஆசிய அபிவிருத்தி வங்கி, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் உதவியின் கீழ் குழாய்நீர் விநியோகத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் குடிநீர் மிகவும் மோசமாக பாதிப்புக்குள்ளான ஒரு பகுதி சம்மாந்துறை, நற்பிட்டிமுனை போன்றவைகளாகும். சம்மாந்துறைக்கு சடையந்தளாவைக் குளத்திலிருந்து குழாய் நீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. சடயந்தளாவை விவசாயிகள் தங்கள் வயல் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் இல்லையென்று சம்மாந்துறைக்குச் செல்லும் குழாய் நீர் குழாய்களை உடைத்து சேதப்படுத்தி இப்போது அப்பகுதியில் பொலிஸார் ரோந்து செல்ல வேண்டியதாக இருக்கிறது. வளத்தாப்பிட்டி என்னும் இடத்தில் ஒரு மாதிரிக கிராமம் அம்பாறையில் வசித்துவந்த தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. ஆனால் குடிப்பதற்கு குடிநீர் பெறமுடியாது தினசரி மட்டுப்படுத்தப்பட்ட அளவு வவுசர்கள் மூலமும் இவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நாமல் ஓயாப் பகுதியில் குடியேறிய சிங்களக் குடும்பங்கள் குடிநீர்ப் பிரச்சினைகளினால் இடம் பெயர வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அக்கரைப் பற்றுக்கு அண்மையில் உள்ள ஆலிம் நகர், பட்டியடிப்பிட்டி ஆகிய இடங்களில் குடிப்பதற்கு மக்களுக்கு நல்ல தண்ணீர் இல்லாத காரணத்தினால் பல நோய்கள் தலைகாட்டியிருக்கிறது. கண்ணகிபுரம் என்னும் இடத்தில் இருக்கும் ஒரு மாதிரிக் கிராமத்துக்கு பனங்காட்டு வாயக்கால் வழி மூலம் தண்ணீர் வரா விட்டால் குடிக்க, குளிக்க நீர் கிடையாது. இப்படியான மாதிரிக் கிராமங்களும் இந்த மாவட்டத்தில் இருக்கிறது.

பெருமளவு 'காடுகள் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டுக் கொண்டு வருவதினால் வரட்சி நிலமை ஏற்பட்டுக்கொண்டு வருவதுடன் சுற்றாடலும் மாசடைந்து கொண்டு வருகிறது. சோலைக் காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டு வருவதினால் அந்தக் காடுகளில் வசித்து வந்த காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக குடிநீர் தேடிக்கொண்டு காட்டுப் பிரதேசங்களை அண்டியுள்ள குடியேற்றக் கிராமங்களுக்குள் நுழைந்து பெரும் சேதத்தை ஏற்படுத்துவதுடன் உயிர் சேதங்களையும் ஏற்படுத்திக்கொண்டு வருகிறது. இவைகள் எல்லாவற்றுக்கும் முக்கியதான காரணம் குடிநீர் பிரச்சினையாகவே இருக்கிறது.


( 4ம் பக்கம் பார்க்க...)




## மட்டக்களப்பு மாவட்டஉடற்பயிற்ச்சி பயிற்றுவிப்பாளரும் புனித மிக்கேல் பாடசாலை கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளருமான சோமசுந்தரம் கிசோகுமாருடன் ஓர் நேர் காணல்

**கேள்வி:-** உங்களுக்கு வயது எத்தனை ?
**பதில்:-** இருப்பத்திரெண்டு

**கேள்வி:-** இந்த சிறுவயதிலே எப்படி பயிற்றுவிப்பாளர் ஆனீர்கள்?
**பதில்:-** அது பெரிய கதைஷ. நான் சிறுவயதாக இருக்கும்போது அதாவது 10வயது என்று நினைக்கிறேன் அப்போது புரூஸ்லி படம் பார்ப்பேன் அன்று தொட்டு இக் கலைகளை நானும் கற்க ஆரம்பித்தேன்.



(நேர் காணல் ச.பிரகாஸ்)

**கேள்வி:-** எத்தனையாம் ஆண்டு உங்கள் கராட்டி மற்றும் பொடிபில்டிங் பயிற்சி சூடு பிடிக்க ஆரம்பித்தது?
**பதில்:-**1994ம் ஆண்டு காலப் பகுதியில்.

**கேள்வி:-** உங்களது பூரண பயிற்சி முடிவடைந்ததும் சுமார் எத்தனை போட்டிகளில் வெற்றி பெற்றீர்கள்?
**பதில்:-** நிறைய போட்டிகளில் என்றுசொல்லலாம்.

**கேள்வி:-** கராட்டியில் உங்கள் குரு யார்?
**பதில்:-** ரமேஸ்நாத்

**கேள்வி:-** உடல் பயிற்சியில் யார்?
**பதில்:-** சமன் என்னும் சகோதர இனத்தவர்.

**கேள்வி:-** இதைவிட விளையாட்டு தொடர்பாக என்ன என்ன தெரியும்?
**பதில்:-** பட்மின்டன் உதைப்பந்தாட்டம் கரப்பந்தாட்டம் கபடி போன்றவை.


**கேள்வி:-** நீங்கள் மேற் கூறியவற்றில் ஏதாவது ஒன்றில் சம்பியன் ஆனதுண்டா?
**பதில்:-** ஆம் இந்த நான்கு போட்டிகளிலும் சான்றிதழ் ஏராளமாக இருக்கிறது

**கேள்வி:-** அதாவது மத்திய மாகாண உடற்பயிற்சி ஆணழகன் போட்டியீல் இரண்டாம் இடம் பெற்றதாக கூறினீர்கள் ஏன் முதலாம் இடத்தை நழுவவிட்டீர்கள்?
**பதில்:-** நான் நினைக்கிறேன் தமிழன் என்ற காரணத்தால் எனக்கு முதலிடம் கொடுக்கவில்லை என்று.

**கேள்வி:-** தற்போது உங்கள் நோக்கம் என்ன?
**பதில்:-** தேசிய மட்டத்தில் முதலிடம் பெறவேண்டும் என்பதே.

**கேள்வி:-** உங்கள் உடற்பயிற்சி சம்பந்தமானகலையினை ஏனைய மட்/வாழ் இளைஞர் சமுதாயத்திற்கு கற்றுக் கொடுக்கிறீர்களா?
**பதில்:-** ஆம் நிச்சயமாக நல்லதொரு கேள்விதான் மட்டக்களப்பு மண்ணிற்கு நல்லதொரு பெருமையை இதன் மூலம் ஈட்டிக்கொடுக்க ஒரு மாணவ சமுதாயத்திற்கு பயிற்சி கொடுத்துக்கொண்டே இருக்கிறேன்.

**கேள்வி:-** கடைசியாக ஒரு கேள்வி உங்கள் வாழ்க்கை எப்படி போகிறது?
**பதில்:-** எந்தவித இடையூறுகளும் இன்றி சுமுகமாக போகிறது அவ்வளவுதான்.
நல்லது சிரமத்தை பாராது பேட்டி தந்தமைக்காக நன்றிகள்.
நன்றி வணக்கம்.



**மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் 17வது ஆண்டு நிறைவு விழா அண்மையில் மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அதிதியாகக் கலந்துகொண்ட சட்டத்தரணி ஏ.எம். பதுறுதீன் சிரேஷ்ட வீரரொருவருக்கு நினைவுச் சின்னம் வழங்கும் போது பிடிக்கப்பட்ட படம்.**

**(படமும் தகவலும்:- மருதமுனை ஹரீஷா)**

## அகில இலங்கை விளையாட்டுப் போட்டி

(முபா)

அகில இலங்கை தேசிய கல்விக் கல்லூரிகளுக்கிடையிலான மெய் வல்லுனர் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 15,16ம் திகதிகளில் களுத்துறை பஸ்னன்ரட்ட கல்விக்கல்லூரி மைதானத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் கலந்து சிறப்பிப்பார்.

இப் போட்டியையொட்டி இடம்பெற்ற உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது., சம்பியனுக்கான விருதை மேற்படி விழாவில் அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி பீடாதிபதி ஏ.எல்.ஏ. றசூலிடம் கல்வி அமைச்சர் வழங்கி கௌரவிப்பார்.

## யூனிவேர்ஸ் கிறிக்கற் கழகத்தின் புதிய நிருவாகிகள்

(கல்முனை மத்திய நிருபர் ஜெஸ்மி)

மருதமுனை யூனிவேர்ஸ் கிறிக்கற் கழகத்தின் 5வது வருடாந்தப் பொதுக்கூட்டம் 25.5. 2001 ஆம் திகதி வீரர் எ.எம்.றஜி தலைமையில் நடைபெற்றது.இதில் பின் வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்

தவிசாளர். இஸட் ஏ.எச்.றஹ்மான் (முகாமையாளர் கினியர் செக்குறிட்டி சேர்விஸ்)
தலைவர்:- எம்.எப்.ஏ.நபீல்.
உப தலைவர்:- எம்.எப்.எச் கைக்கல்.
செயலாளர்:- ரீ.எல் ரிபாஸத்துல்லாஹ்.
பொருளாளர்:- ஏ.எம்.மக்கீன்
நிருவாக அங்கத்தவர்கள். ஏ.எம். றஜாய், எம்.மனாகிப் எம்.எஸ்.எம் முனாஜிர், எம்.எம்.பாஹிம், ஏ.எச் எம்.நிஸ்றி
உப தவிசாளர்:- கே.எம்.றிஸ்வி
பயிற்றுவிப்பாளர் இஸட்.எம். பைஸர் தகவல் தொடர்புத்துறை எம். எம். எம்.முபீன்

## வாசகர் நெஞ்சம்

### எமக்கு நீதி கிடைப்பது எப்போது ?

மட்டக்களப்பு நகரில் படமாளிகையை ஒட்டியுள்ள ஒரு பிரபல மருத்துவமனையில் பணிபுரிந்து வருகின்ற தாதியர்களாகிய நாம் 1991ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சேவையில் உள்ளோம்

நாம் இப் பணிமனையில் அனுபவித்துவரும் கஷ்டங்களை வாய் திறந்து சொல்லமுடியாத ஊமைகளாகவும் கொத்தடிமைகளாகவும் இப்பணிமனை மேலதிகாரி கண்டபடி நடத்துகின்றார். பெண் தாதியர்களாகிய நாம் இரவு நேர சேவையில் ஈடுபடும் போதும் கூட பெண் ஊழியர்கள் சட்டத்தின் பிரகாரம் விசேட இரவு நேரக் கொடுப்பனவுகள் இல்லாமழும் மேலதிகமாக செய்யப்படும் வேலை நேரங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படாமலும் உள்ளது. எமது மாதாந்த சம்பளத்திலும் கூட சட்டப்படியான ஊதியங்கள் வழங்கப்படவில்லை. மற்றும் இந்த மருத்துவமனையில் பணி புரிகின்ற எமக்கு இலவச மருத்துவ சிகிச்சை கூடஇல்லாத நிலையில் நாம் செயல்பட்டு வருகின்றோம். இது சம்பந்தமாக நாம் வாய் திறந்தால் வேலை பறிபோகும் நிலை தான் ஏப்படுகிறது மருத்துவமனை ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை பணிபுரிந்து முக்கியமாக சில நீதி நியாயங்களை சுட்டிக்கேட்க முனைந்து எமது மதாதியர்கள் சிலர் சேவையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். நானும் இரண்டு குழந்தைகளின் தாய். எனது கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்பு புதுக்குடியிருப்பில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். எனது குடும்பம் இந்த மருத்துவமனையில் இருந்து கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்து வருகின்றது. தற்போது நானும் இந்த மருத்துவமனை அதிகாரிகளினால் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளேன். ஒருமாதகாலம் ஆகியும் இன்னும் எனக்கு நீதி நியாயம் கிடைக்கவில்லை. இங்கு நடப்பதை எங்கு சென்று கூறுவது? எமது விடையத்தில் உரியவர்கள் கவனம் எடுப்பார்களா?

**திருமதி கிலேரா ஞானப்பிரகாசம்**
**இருதயபுரம் ,**
**மட்டக்களப்பு.**

### சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு நிரந்தர நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கவும்

சென்ற இலங்கையின் சுதந்திர தினத்தில் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற பிரதிநிதியும், கிராம அபிவிருத்தி வீடமைப்பு கிழக்கு மாகாண புனரமைப்பு அமைச்சருமான திருமதி.பேரியல் அஷ்ரபப்பினால் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட செயலகத்துக்கு இதுவரை காலமும் தகுதியான நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காத தினால் பொதுமக்கள் மிகவும் கஷ்டத்துக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சமுர்த்தி உதவி பெறத் தகுதியானவர்கள் தெரிவில் சில நாகரீகமற்ற கேள்விகளுக்கு பொது மக்கள் பதில் அளிக்க வேண்டி ஏற்பட்டதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு இளம் பெண்ணிடம், உமது கணவர் எங்கே என்று தற்காலிக நிர்வாக உத்தியோகத்தர் கேள்வி கேட்க, அப்பெண் வெளிநாட்டில் என்றால். இரவில் யார் யார் இருப்பது என சுக துக்கம் விசாரித்தார்.

எனவே, சமூகத்தில் இப்படியான ஊழியர்களை நீக்கிவிட்டு, மனிதாபிமானமும், பண்பும் நிறைந்த தகுதியான உத்தியோகத்தர்களை நியமிக்கும்படி உள்நாட்டு பொது நிர்வாக அமைச்சர் ரிச்சட் பத்திரன, முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் ஜனாப் றவூக் ஹக்கீம், ஜனாப் அகமட் றிஷ்வி சின்னலெவ்வை ஆகியோருக்கு பெக்ஸ் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும், இக்கிராமத்தில் 30 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் பகுதிக்கு செயல்திறன் உள்ள ஒருவரை மிக விரைவில் நியமித்துத் தரும்படியும் ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் கேட்டுள்ளது.

**எவ்.காசிம் எம்.றபீக்**

### கோட்டை புகையிரத நிலையத்தில் அறிவிப்பு தமிழில் இல்லை

கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்படும் எல்லாப் புகையிரதங்கள் பற்றிய விபரங்களை அவ்வப்போது சிங்களம் ஆங்கிலம் ஆகியமொழிகளில் மட்டுமே அறிவிப்புச் செய்யப்படுகின்றன ஆனால் தமிழ் மொழிமூலம் அறிவிப்பு செய்யப்படுவதில்லை இந்த செயற்பாடுகள் காரணமாக சிங்களம் ஆங்கிலம் தெரியாத தமிழ்மொழி பேசுவோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

முழு நாட்டினதும் பிரதான நிலையமான கோட்டை புகையிரத நிலையத்தில் தமிழ்மொழி அமுல்படுத்தப்படாதது அரசியல் அமைப்பையே மீறும் செயலாகும். கடந்த காலங்களில் தமிழ் மொழி மூலம் அறிவித்தல்கள் செய்யப்பட்டு வந்த போதிலும் இப்பொழுது கைவிடப்பட்டிருப்பது அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் தான் என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த விடயம் குறித்துப் போக்குவரத்து அமைச்சர் கவனம் செலுத்தவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**நயீதா பாயிஸ்**
**மருதமுனை.**

# தமிழ் குழுவுக்கு மாதாந்தம் அரசு வழங்கும் நிதி எவ்வளவு..? விநாயகர் கேட்கின்றார்!

(நமது நிருபர்)

**தமிழ்க் குழுக்களுக்கு மாதாந்தம் அரசு வழங்கும் நிதி எவ்வளவு? என்று பாராளுமன்றத்தில் அனுருத்தவிடம் கேள்வி எழுப்ப விநாயகமூர்த்தி முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றார். அரசின் துணைப்படையாக இயங்கும் தமிழ்க் குழுக்களுக்கு மாதாந்தம் அரசு வழங்கும் தொகை எவ்வளவு என்று கோரும் கேள்வி ஒன்றை பாதுகாப்பு அமைச்சரிடம் நாடாளுமன்றில் விடுப்பதற்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியே இக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார். அவர் எழுப்பியுள்ள வினா வருமாறு:- பாதுகாப்புப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களும், படைகளின் சாதாரண கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாடுகளுக்கு வெளியே இயங்கும் படையினருமே பத்திரிகையாளர்களுக்கு எதிரான மீறல்கள் உட்பட மனித உரிமை மீறல்களுக்கு காரணம் என்று கடந்த 31 ஆம் திகதி வெளியிட்ட செய்திக் குறிப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

(அ) பாதுகாப்புப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களின் பெயர்கள் - (ஆ) அவர்களுக்கு மாதாந்தம் அரசினால் வழங்கப்படும் தொகை- (இ) முன்னாள் தீவிரவாதக் குழுக்கள் இப்போது அரசின் துணைப் படையாகப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளன - என்ற விபரம் - (ஈ) அப்படி அமர்த்தப்பட்டிருந்தால் அவற்றின் பெயர்களும் துணைப்படை என்ற முறையில் அவர்களது பணிக்குச் செலுத்தப்படும் தொகை - மேற்படி நான்கு விடயங்களையும் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்று விநாயகமூர்த்தி கேட்டுள்ளார்.

## கிளிநொச்சி அரச செயலகம் மீண்டும் ஆரம்பம்

(வவுனியா நிருபர்)

கிளிநொச்சி அரச செயலகம் நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ள நிலையில் நேற்று முதல் சம்பிரதாய பூர்வமாக இயங்க ஆரம்பித்துள்ளது. நேற்று முற்பகல் 11.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில் முதலில் மங்கள விளக்கினை கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் , தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் கே.பி.ரெஜி, கண்டாவளை பிரதேச செயலர் மத்தியாஸ், பூனகரி பிரதேச செயலர் வைரமுத்து, கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சு.சுறில் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

சத்ஜய இராணுவ நடவடிக்கை காரணமாக 1996 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இங்கி வந்த இந்த செயலகம் விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் கிளிநொச்சி மீட்கப்பட்! !பின்னர் நேற்று முதல் அதன் பழைய இடத்தில் இங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## கரையோர மாவட்ட பிரச்சினை முஸ்லிம் காங்கிரஸ் கருத்து வேறுபாடு

(கொழும்பு)

இலங்கையில் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குள் கருத்து வேறுபாடுகள் வலுத்து வருவதாக 'ரோய்ட்டர்' செய்தி. நிறுவனம் தெரிவித்துள்ளது. 11எம்.பிக்களைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. 'முஸ்லிம்களுக்கென கரையோர கல்முனை மாவட்டம் மே மாதக் கடைசிக்குள் ஸ்தாபிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். ஆனால் அந்த கால எல்லை காலாவதியாகிவிட்டது' - என்று முஸ்லிம் காங்கிரஸின் எம். பியான ஆர்.சின்னலெப்பை கூறுகின்றார். "இதனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் நாங்கள் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தம் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. இந்தப் பிணக்குக் குறித்து புதனன்று ஜனாதிபதியை அரச நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் சந்திக்கும் போது முடிவு செய்யப்படும். இனி நாம் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது ஜனாதிபதியின் முடிவைப் பொறுத்து அமையும்" - என்றும் சின்னலெப்பை குறிப்பிட்டார்.

### மன்னார்........

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பதினான்கு பேரும் தங்களது வழங்கு விசாரணையை கொழும்புக்கு மாற்றுமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவையடுத்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரகாரம் இன்றைய வழக்கு விசாரணைக்கு இவர்களை ஆஜர்படுத்த வேண்டாம் என நீதிபதி அஸ்மீர் உத்தரவிட்டுள்ளார்.

### மணலாற்றில்....

வட்டக்கச்சிப் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு நாட்டுப்பற்றாளர்கள் சுகயீனம் காரணமாக இறந்துள்ளனர். கடந்த 15 ஆம் திகதி நாட்டுப் பற்றாளர்குமார் (பெருமாள் விஜயகுமார், பிரமந்தனாறு, விஸ்வமடு)

## கண்ணிவெடிகள் மீட்பு !

(நமது நிருபர்)

கிளிநொச்சியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வாகனக் கண்ணிவெடிகள் இரண்டு வெடிக்கும் நிலையில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் கிளிநொச்சியை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனக் கண்ணிவெடிகளே மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளன.

என்பவரும் .

கடந்த வருடம் செம்ரெம்பர் 24 ஆம் திகதி நாட்டுப்பற்றாளர் மதி (வைரவன் வேலும் மயிலும், கல்மடு வட்டக்கச்சி) என்பவரும் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

## இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் 11 பேர் கைது

(யாழ் நிருபர்)

இலங்கையின் வடகடலில் மேலும் 11 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நெடுந்தீவு கடற்பரப்பில் இலங்கை கடல் எல்லைக்குள் இவர்கள் அத்துமீறி மீன் பிடித்ததனால் 2 ஆம் திகதி சனிக்கிழமை இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிசாரிடம் கையளிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கந்தல் உடைகளுடன் காணப்பட்ட இவர்கள் 11 பேரையும் பொலிசார் நேற்று மாலை 4.30 மணிக்குப் பின்னர் யாழ் நீதிமன்றத்தில் பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்தார்கள். தாங்கள் இலங்கைக் கடலில் மீன் பிடிக்கவில்லை என்றும், மழை நேரக் காலநிலை காரணமாக இந்திய ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தாங்கள் இலங்கை கடற்பரப்பினுள் கடலலைகளினால் அடித்துவர நேர்ந்ததாகவும் இவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்கள். எதிர் வரும் 13 ஆம் திகதி வரை இவர்களைத் தடுத்து வைக்குமாறும் அவர்களின் இரண்டு படகுகளைக் காரைநகர் கடற்படை முகாமில் பாதுகாப்பாக வைக்குமாறும் பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பிரான்ஸ் நாட்டில் ''பலங்கொண்டெழுவோம் எழுச்சி'' விழா

(நமது நிருபர்)

பிரான்ஸ் நாட்டில் ஈழத்தமிழர்களின் ''பொங்கு தமிழ் எழுச்சி'' நிகழ்வுகளின் பிரதிபலிப்புக்களாக பல்வேறு நிகழ்வுகள் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

பல்வேறு தமிழ் சமூக அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை அங்கீகரித்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை ஒன்றையும் நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மற்றும் கட்டுரை கவிதைப் போட்டிகளும் இடம்பெறவுள்ளதுடன் இவ்வாறான நிகழ்ச்சிகளை ஐரோப்பிய நாடுகள் சகலவற்றிலும் நடத்துவதற்கும் தமிழர் எழுச்சிக்குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

### மன்னர்........

பொலிசார் கடுமையான தடியடிப் பிரயோகம் செய்தனர். அதற்கும் அடங்காதோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக்குழப்பத்தினால் இதுவரையில் இருவர் கொல்லப்பட்டும் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

கொலையாளி திபேந்திரா என்றும் முன்னரும் பின்பும் தானியங்கித்துப்பாக்கி தற்செயலாக வெடித்தது என்று புதிய மன்னர் கஜனேந்திரா கூறிய காரணங்களால் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

தற்போத விசாரணைகள் அரசாங்கத்தினால் மன்னர் கஜனேந்திராவினாலேயே மேற்கொள்ளப் படுவதனால் மக்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்தி யுள்ளது.

இதேவேளை உண்மையில் என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவதில் சிக்கல்கள் இருக்கின்றது. என்று மன்னர் கஜனேந்திரா இப்போது கூறியுள்ளார்.

### நேற்று பாலகிட்ண....

நீதியரசர் பாலகிட்ணரில் இறுதிச்சடங்குள் நேற்று முற்பகல் கொழும்பு கனத்தை பொது மயானத்தில் இடம் பெற்றது.

இவரது மறைவையடுத்து பெரும்திரளான மக்கள் சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தியதுடன் இறுதிச் சடங்கின் போதும் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

எழுபது வயதான பாலகிட்ணர் கடந்த சனிக்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மயங்கி விழுந்தார். இவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது உயிரிழந்தார்.

### படையினர் ...........

அதில் கலந்து கொண்டு ஜனாதிபதி உரையாற்றினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- புலிகள் சமாதானப் பேச்சுக்கு வரும்வரை படையினர் யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வர் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது. விடுதலைப் புலிகள் இதுவரை சமாதான நடைமுறைகளைப் புறக்கணித்து வந்தனர். ஆனால் தற்போது அரசியல் தீர்வில் இணைந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மீது எப்போதும் இல்லாதவாறு நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதும், அரசின் சிறந்த வெளிவிவகாரக் கொள்கைகளுமே இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது - என்று ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

### காவத்முனையில்.........

இந்த எறிகணைகளில் பல காவத்தமுனை கிராமத்தில் வீழ்ந்து வெடித்துள்ளன. இதனால் காவத்தமுனையில் சில வீடுகளும் சேதமடைந்துள்ளன.

காவத்தமுனையில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் காயமடைந்த 15 பேரின். பெயர் விபரம் வருமாறு: நபீர் (21 வயது), எச்.எம்.அகமட் (44 வயது). மீராசாகிபு (30 வயது), ஜமால் (25 வயது), கமால்தீன் (25 வயது). மொகமட் அலியார் (45 வயது), புகாரி (33 வயது), மீராமுகைதீன் (25 வயது), ஆதம்லெப்பை (35 வயது) ரகுவத்தும்மா (41 வயது) ரகுமா (22 வயது), பாத்திமா (37 வயது), குழந்தையும்மா (44 வயது), ஜெமிலா (28 வயது). சலீம் (21) காயமடைந்த இவர்கள் வாழைச் சேனை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டு சிலர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பலியான படையினரின் சடலங்கள் பொலனறுவை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. காயமடைந்த படையினர் கல்குடா முகாமுக்குக் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு உலங்குவானூர்தி மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்களை கல்குடாவுக்குக் கொண்டு செல்லும்போது வாழைச்சேனை நகரில் வைத்து வாகனத்தில் சென்ற படையினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு சென்றனர். இதனால் நகரில் நின்றிருந்த பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். இதனால் நகரில் பெரும் பதட்டம் ஏற்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் படையினர் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.